பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 11 வியாழக்கிழமை 28.09.2023 அதிர்வு 59

யாழில் 8 வயதுச் சிறுமியின்

## அகற்றப்பட்ட இடது கை கொழும்பு பல்கலைக்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் 8 வயதுச் சிறுமியின் அகற்றப் பட்ட இடது கையின் ஒரு பகுதியை 04


# தேரேறி வந்தான் வல்லிபுரத்தான் அலையெனத் திரண்டனர் பக்தர்கள்



- எஸ்.நிதர்ஷன் -

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி, ஸ்ரீவல்லி புர ஆழ்வார் ஆலய வரு டாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயப் பிரதம குரு தலைமையில் இடம்பெற்ற வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து காலை 8.45 மணியளவில் வல்லிபுரத் தான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்தார். 04



# 13 ஐ உடனடியாக அமுல்படுத்துங்கள்

## - விக்கி வேண்டுகோள்

- எஸ்.நிதர்ஷன் -

"இலங்கை அரசின் அனுசரணை யோடு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ள நிலையில் 13 ஆவது திருத் தச் சட்டத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளை உருவாக்கி அதிகாரங் களை வழங்க வேண்டியது முன்னரை விடவும் இப்போது மிக அவசிய மாகும்."

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணி யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரி வித்துள்ளார். 04

# ரயிலில் மோதுண்டு 4 யானைகள் மரணம்

## யாழ். வந்த பயணிகள் சிரமம் 7 மணித்தியாலங்கள் தாமதம்

கொழும்பில் இருந்து காங் கேசன்துறை நோக்கிப் பய ணித்த இரவு தபால் ரயிலில் மோதி நான்கு 04



# சகல துறை வீரரான தனுஷ்க விடுதலை

## குற்றமற்றவர் எனத் தீர்ப்பு



அவுஸ்திரேலியாவில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் தனுஷ்க குணதிலக குற்றமற்றவர் என அந்நாட்டு நீதி மன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். (விரிவான செய்தி 17ஆம் பக்கத்தில்)

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைக்கு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தடை!

## மீறினால் சட்ட நடவடிக்கை - மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவிப்பு

(அ.அஸ்வர்)

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிப்பு.

சுற்றாடல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தால் இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2341-30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் விதிகளின் பிரகாரம் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பிளாஸ்ரிக்கால் உருவாக்கப்பட்ட குளிர்பான உறுஞ்சு குழாய்கள், சாப்பாட்டுக் கோப்பைகள், கப்புகள், கரண்டி, முள்ளுக் கரண்டிகள், கத்திகள் மற்றும் பொலிஷ் டயரிங்கால் தயாரிக்கப்பட்ட உணவுப் பெட்டிகள், பூ மாலைகள் மற்றும் இடியப்பத் தட்டுகள் என்பன இதில் அடங்கும்.

இவற்றைப் பாவித்தல் மற்றும் நாட்டுக்குள் பாவிப்பதற்கான ஏதேனும் செயற்பாடுகள், வியாபாரங்கள் அல்லது கைத்தொழில்களுக்காக பாவித்தல் 2023.10.01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கட்டளை, விதிகளுக்கு அமைவாக செயற்படுவதற்குத் தவறும் நபர்களுக்கு 1980 - 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளது.

## இன்று கூடுகிறது தமிழி பேரவை



தமிழி பேரவை இந்த ஆண்டின் கார் காலக் கூட்டத் தொடருக்காக இன்று (28) மாலை 06:30 மணிக்கு கூடுகிறது.

வட்டுக்கோட்டையில் இந்தப் பேரவை கூடவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழி அமைப்பின் பெருந்தலைவர் உள்ளிட்ட நிரந்தர சபை உறுப்பினர்களான தமிழி பேரவை உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மணியந்தோட்டத்தில் கண்காட்சி

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியந்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் 'இணைந்த கரங்கள்' நடத்தும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' என்னும் மாபெரும் கண்காட்சி நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை மணியம்தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், இலங்கையின் சர்வமத, இன மக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்கால சமூகம் மறந்து போகும் பழைய காலத்துப் பாவனைப் பொருள்கள் உட்பட பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விற்பனைக் கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுகள் என்பனவும் இடம் பெற வுள்ளன.

சிறுவர்களையும், இளைஞர்களையும், பெண்களையும் முதன்மைப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிக்கொண்டுவரும் வகையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 125 கிலோ கேரளா கஞ்சாவுடன் காரைநகரில் ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதியில் 125 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சிலர் தப்பி சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். காரைநகர் கடற்பகுதியில் நேற்று (27) புதன்கிழமை இரவு சந்தேகத்துக்கிடமான படகொன்றைக் கடற்படையினர் சோதனையிட முயன்றனர்.

இதன்போது கடற்படையினரைக் கண்ட சிலர் படகில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பி சென்றவர்களில் ஒருவரைக் கடற்படையினர் மடக்கி பிடித்தனர். பிடிபட்ட நபரை படகின் அருகில் அழைத்து சென்று படகைச் சோதனையிட்ட போது படகில் மூன்று உரப் பைகளில் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சாவின் தொகை சுமார் 125 கிலோ கிராம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.





கைது செய்யப்பட்ட நபர் மீட்கப்பட்ட கஞ்சாவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை காரைநகர் - மருதபுரம் பகுதியில் இரண்டரை கிலோ கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் - மருதபுரம் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா...



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா இன்று பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ அரோஹரா கோஷத்துடன் இடம்பெற்றது.









# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## 13ஐ உடனடியாக...

இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென இந்தியாவும், அமுல்படுத்தப் போவதாக இலங்கையும் தெரிவித்திருந்த நிலையில் அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதால் இந்த விடயத்தில் இந்தியா கரிசனைகொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

13 ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் இன்று நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பாக ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் இன்று என்னையும் சந்தித்துக் கலந் துரையாடி இருக்கின்றனர்.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்கின்றபோது அந்தச் சட்டத்தில் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெற வேண்டியது மிகவும் அவசியம்.

இதனடிப்படையில் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் தொடர்ந்தும் எப்படி மீள எடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். அதற்கமைய இன்றும் நாங்கள் தொடர்ந்து பேசி இருக்கின்றோம்.

கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி இது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கான குழுவை வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதாகச் சொல்லப்பட்டது. எனினும், அது வெளிவராத நிலையில் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு என்று பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார். இதனால் எங்களுக்குத் தாமதம் ஏற்படுவதால் இது சம்பந்தமான நிபுணர் குழுவின் ஊடாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆராய்ந்திருக்கின்றோம். எனினும், நிபுணர்கள் குழு தீர்மானித்து அரசுக்கு அறிவுரை வழங்குவது தாமதமாகிக் கொண்டிருக்கின்றது.

ஆகவே, இதிலேயே இனியும் தாமதம் ஏற்படக்கூடாது என்ற காரணத்துக்காக நாங்கள் இது சம்பந்தமாக என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் தொடர்பில் இன்று பேசிக் கொண்டோம்.

முக்கியமாக இந்தச் சட்டத்தில் இருந்து பறிபோன அந்த அதிகாரங்களைத் திரும்பப் பெற வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. அதனை இந்தியாவும் கருத்தில் எடுத்துக்கொண்டு இருக்கின்றபடியால் இது சம்பந்தமாக இந்தியாவும் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

ஆனால், ஜனாதிபதியினுடைய எண்ணங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பது பற்றி எங்களுக்குத் தெரியவில்லை. ஆயினும் அவர்தனக்குப் பதிலாக இங்கு இருக்கும் மற்றைய அலுவலர்கள் அல்லது அரசியல்வாதிகள் ஊடாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடும்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளை உருவாக்க வேண்டிய அவசியம் எப்போதும் இல்லாததைப் பார்க்கவும் இப்போது மிக மிக அதிகமாகியிருக்கின்றது.

குறிப்பாக தமிழ் மக்களுடைய சகல அதிகாரங்களும் குறைந்து குறைந்து கொண்டு வருகின்றன. அரசின் அனுசரணையோடு தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவாறு பலவிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு உள்ளிட்ட அதிகாரங்களின் அபகரிப்பு என்பன தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஆகவே, இவற்றை நாங்கள் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களுடைய அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு முதல் கட்டமாக மாகாண சபைகள் அமைக்கப் பெறுவது அவசியம்.

அதற்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு எடுக்க வேண்டும் என்பது சம்பந்தமாக நாங்கள் ஆராய்ந்துள்ளோம். இன்றைய தினம் இவை பற்றி பலவிதமான கோணங்களில் நாங்கள் பேசியும் இருக்கின்றோம்.

விசேடமாக அரசியல் யாப்பில் எந்தெந்த உறுப்புரைகளின் அடிப்படையிலேயே இவற்றை நாங்கள் முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் முக்கியமாக 154 ரி இனுடைய ஏற்பாடுகளை நாங்கள் பரீட்சித்துப் பார்த்தோம்.

இதில் முக்கியமாக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவியான கோசலை மதனும் வந்திருந்து அவரும் இது சம்பந்தமாக தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆகவே 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அந்தத் திருத்தத்தில் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு நாங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் அரசினுடைய அனுசரணை இது சம்பந்தமாகப் பெற வேண்டும் என்பது பற்றியும் இந்தியாவினுடைய கரிசனையை இதற்குப் பெற வேண்டும் என்பது சம்பந்தமாகவும் நாங்கள் பேசிக்கொண்டோம்.” - என்றார்.

## அகற்றப்பட்ட இடது கை...

உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், நீதிபதி அ.ஆனந்தராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாகச் சேர்க்கப்பட்ட சிறுமி ஒருவருக்குக் கடந்த 2ஆம் திகதி இடது கையின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்டது.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 8 வயதான சிறுமிக்கே இவ்வாறு கையின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டது.

4 நாட்களாக குறித்த சிறுமிக்குக் காய்ச்சல் நிலவியதை அடுத்து தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்ற போதிலும் அவர் குணமடையாமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குறித்த சிறுமிக்கு உடலுக்கு மருந்துகளைச் செலுத்தும் கனுலா பொறுத்தப்பட்டு அதனூடாக மருந்துகள் செலுத்தப்பட்டன.

இந்தநிலையில் கனுலா பொருத்தப்பட்ட கை செயலிழந்தமையை அடுத்து வைத்தியர்கள் அவரது இடது கையின் மணிக்கட்டுப் பகுதியை சத்திர சிகிச்சை மேற்கொண்டு துண்டித்தனர்.

சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு விடுதியில் கடமையாற்றியவர்களின் அலட்சியமே காரணம் என்று சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்தநிலையில், சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணர் ஒருவர் ஊடாக உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பொலிஸார் கோரியமைக்கு அமைய நீதிமன்றம் குறித்த கட்டளையைப் பிறப்பித்தது. குறித்த வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தேரேறி வந்தான்...

விஷ்ணு பெருமானின் அருளைப் பெற்றுக்கொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சமுத்திரத் தீர்த்தமும், மறுநாள் சனிக்கிழமை கேணித் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

## ரயிலில் மோதுண்டு...

யானைகள் உயிரிழந்துள்ளன. இதனால் குறித்த ரயில் இன்று காங்கேசன்துறை வந்தடைய 7 மணித்தியாலங்கள் தாமதமடைந்தன. பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நேற்று இரவு 11.50 மணியளவில் அம்பன்பொல மற்றும் கல்கமுவ ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பயணித்த இரவு தபால் ரயிலில் இந்த நான்கு யானைகளும் மோதியுள்ளன.

இந்த விபத்தில் ரயில் எஞ்சினின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

விபத்தில் சம்பவ இடத்தில் மூன்று யானைகள் பலியாகியுள்ளதுடன் ஒரு யானை இன்று காலை உயிரிழந்துள்ளது என கல்கமுவ யானை கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.





# புலமைப் பரிசில் மாணவர்களுக்குச் செயலமர்வு

2023 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களது நலனைக் கருத்தில் கொண்டு வெற்றித் தேர்வு வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் செயலமர்வு இன்று (28) யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக இடம்பெற்றன.



# நெடுங்கேணி மாணவர்களின் போக்குவரத்துக்கு நிதியுதவி

## சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா – நெடுங்கேணி பிரதேச மாணவர்களின் போக்குவரத்துக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது.

பாடசாலை வரவொழுங்கற்ற பிள்ளைகளின் வரவொழுங்கை மேம்படுத்தும் நோக்கில் பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பான வவனியா வடக்கு பிரதேச செயலகத்தின் செயற்றிட்டத்துக்கு அமைவாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி மகா வித்தியாலயம், ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 83 மாணவர்களின் போக்குவரத்து நலன் கருதி இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்காக வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தால் பேருந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


இதற்கு கார்த்திகை, ஐப்பசி மாதங்களுக்கான நிதிச் செலவை சந்நிதியான் ஆச்சிரமம் ஏற்றுள்ளது .

கார்த்திகை மாத நிதியாக ஒரு லட்சத்து 345 ரூபாவை பிரதேச செயலாளரிடம் ஆச்சிரமம் வழங்கியது.

இந்தச் உதவித் தொகையை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கினார்.

பிரதேச செயலாளர், சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தடுமாறும் சரத் வீரசேகர

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சரும், இலங்கைக் கடற்படையின் ஓய்வு பெற்ற மூத்த அதிகாரியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர எம்.பிக்கு நுழைவு விசா வழங்க அமெரிக்கா மறுத்து விட்டது.

முன்னர், இந்த விசா வழங்குவது தாமதமாகும் எனக் கூறப்பட்டது. அடுத்த மாத இறுதியில் அமெரிக்கா செல்ல வேண்டிய அவருக்கு இந்த மாத நடுப் பகுதியிலேயே விசா தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்ட போதே அது மறுக்கப்படப் போகின்றது என்பதற்கான கட்டியம்தான் தாமதமாகும் என்ற தகவல் என இப்பத்தியில் கோடி காட்டி இருந்தோம்.

விசா மறுப்பு இப்போது ஓரளவுக்கு ஊர்ஜிதமாகி விட்டது.

இலங்கை நாடாளுமன்றத்தில் பல்வேறு விடயங்களையும் மேற்பார்வை செய்வதற்கான குழுக்கள் உள்ளன. அத்தகைய 17 குழுக்களின் தலைவர்களுக்கு அமெரிக்காவில் 10 நாள் கல்விச் சுற்றுலா ஒன்றை தேசிய ஜனநாயக நிறுவனத்துடன் இணைந்து யுஎஸ்எயிட் அமைப்பு முன்னெடுக்கிறது.

சுற்றுலாவில் அங்கம் வகிக்க வேண்டிய தேசிய பாதுகாப்புக்கான மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகரவுக்கு மட்டுமே விசா மறுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சபாநாயகருக்கு எழுத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார் சரத் வீரசேகர எம்.பி.

இலங்கை நாடாளுமன்றம் பிரேரித்துள்ள ஒரு பிரதிநிதிக்கு, அவரினால் அமெரிக்க நலன்களுக்கு அச்சுறுத்தல் இருந்தாலே தவிர, விசா வழங்க முடியாது என அமெரிக்கா மறுக்கக்கூடாது, மறுக்க முடியாது என அந்த முறைப்பாட்டில் கொதித்திருக்கிறார் சரத் வீரசேகர.

அமெரிக்க நாட்டுக்கு விஜயம் செய்வதற்கான விசாவை வழங்குவது குறித்து தீர்மானிப்பது அமெரிக்க தூதரகத்தின் தனித்துவ உரிமை என்றாலும், இலங்கை நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான மேற்பார்வைக் குழுவின் சார்பில் தலைவரான தம்மைத் தவிர்த்து, அக்குழுவில் இடம்பெறும் சிறுபான்மையினப் பிரதிநிதி ஒருவரை அமெரிக்கச் சுற்றுலாவுக்கு நியமிக்கும்படி அமெரிக்கத் தூதரகம் கேட்டுள்ளது, அந்த உரிமை அமெரிக்கத் தூதரகத்திற்குக் கிடையாது என்றும் அவர் சீறியிருக்கின்றார்.

இந்த விடயம் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயரத்தினவிடம் தாம் விளக்கம் கோரப்போகின்றார் என்றும் -

தேசியப் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தலைவர் என்ற முறையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் படைகளின் தளபதிகளை அழைத்து இவ்விடயம் குறித்துத் தாம் அவர்களுடன் ஆலோசனை நடத்தவிருக்கின்றார் என்றும் -

அட்மிரல் சரத் வீரசேகர அந்த முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்த நடவடிக்கையைப் பார்க்கும் போது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த 'மனிதன்' சினிமா படத்தின் இறுதி கிளைமாக்ஸ் தீர்ப்புக் காட்சி நினைவுக்கு வருகிறது. கார் விபத்து வழக்கில் இளைஞர் ராகுல் திவானுக்கு சிறைத் தண்டனை தீர்ப்பு வழங்குகிறார் நீதிபதி ராதா ரவி. அதைக் கேட்டு சட்டத்தரணி பிரகாஷ்ராஜ் இப்படித்தான் துள்ளிக் குதிப்பார். 'தீர்ப்புக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவேன்' - என முழக்கமிடுவார்.

"மிஸ்டர் ஆதிசேஷன் (பிரகாஷ்ராஜ்) அது உங்கள் இஷ்டம். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போங்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கு மட்டுமல்ல, ஜனாதிபதியிடம் வேண்டுமானாலும் போங்கள். ஆனால் இன்று ராகுல் திவான் ஜெயிலுக்குப் போக வேண்டும்" என்பார் நீதிபதி.

அந்த நிலைதான் வீரசேகரவுக்கு. அவர் எங்கும் போகலாம். எதுவும் செய்யலாம். ஆனால் அமெரிக்க விசா அவருக்கு இல்லை என்பதுதான் நிஜம்.



## பணியில் ஓய்வு பெற்றுச் சென்றார் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா 32 வருட அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று (27) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சனி சிறிகாந்த் தலைமையில் இடம்பெற்றது.

32 வருடங்கள் அரச சேவையை பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு நேற்று புதன்கிழமை (27) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை நிகழ்வொன்று இடம்பெற்றது.

1991 ஆம் ஆண்டு அரச நிர்வாக சேவையில் தனது அரச பணியை தொடங்கிய திருமதி.கலாமதி பத்மராஜா அம்பாறை மாவட்டத்தில் தமது முதல் நியமனத்தை பெற்று கடமையை ஆரம்பித்ததுடன், பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளராக நியமனம் பெற்றார்.

அதன் பின்னர் பிரதேச செயலாளராக மாவட்டத்தின் மண்முனை வடக்கு உள்ளிட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றி, பின்னர் நிர்வாக சேவையில் பதவியுயர்வு பெற்ற இவர் மாகாண அமைச்சுக்கு நியமிக்கப்பட்டு அங்கு 10 வருடங்கள் பல்வேறு அமைச்சுகளில் பணியாற்றினார்.

2020 ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக கடமைப் பொறுப்பை ஏற்று பணியாற்றி வந்த நிலையில், மீண்டும் இடமாற்றலாகி மாகாண சபையில் கடமையாற்றி, 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 திகதி முதல் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக அமைச்சரவை அங்கீகாரத்துடன் மீளவும் நியமிக்கப்பட்டார்.

நாளை 29 ஆந் திகதி தமது 60 வயதைப் பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

பாராட்டு நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஏ.எம்.பஸீர், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி.ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை மதிவண்ணன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான வீ.நவநீதன், ஆர்.ஜதீஸ்குமார், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் திருமதி லக்சிகாக தீசன், மட்டக்களப்பு மாவட்ட செயலக சமுர்த்திப் பிரிவின் பிரதம முகாமையாளர், ஊடகப் பிரிவின் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.







# அந்-நஹ்ழா கல்லூரியின் 5 ஆவது பட்டமளிப்பு விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அந்-நஹ்ழா அரபுக் கல்லூரியின் 5 ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ. எம்.பதுறுத்தீன் தலைமையில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் அரங்கத்தில் (24) நடைபெற்றது.

பட்டம் பெற்ற ஹாபிழ்கள் மற்றும் ஆலிம்களின் அறிமுக ஊர்வலம் கல்லூரி அமைந்திருக்கும் மஸ்ஜிதுல் நூராணியா ஜும்ஆ பள்ளிவாசல் மூன்றலில் ஆரம்பமாகி முஸ்லிம்களின் பாரம்பரிய ரப்பான் இசைக்கப்பட்டு பொல்லடி நிகழ்வுடன் அல்-மனார் மத்திய கல்லூரி வரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாஜ் அல் ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நஹ்ழா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.அபூ உபைதா (மதனி), தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அரபு மொழித் துறை ஓய்வுநிலை பேராசிரியர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.ஜலாலுத்தீன, அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்-ஷெய்க் ஐ.எல். எம்.ஹாஷிம் சூரி (மதனி), பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, இறக் காமம் பிரதேச செயலாளரும் அரபுக் கல்லூரியின் பழைய மாணவருமான அல்ஹாபிழ் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

முன்னாள் மேல் நீதிமன்ற ஆணையாளர் சட்டத்தரணி எம்.எஸ்.எம், ஜெமீல், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி, கல்முனை குவாஸி நீதிமன்ற நீதிபதி எப். எம்.ஏ. அமீருல் அன்சார் மௌலானா, அல்-மனார் மத்திய கல்லூரி அதிபர் ஐ.எல் உபைதுல்லாஹ், மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் பேராசிரியர் ஐ.எல்.எம்.மாஹிர், மஸ் ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம்.முஹர்ரப், தப்லீக் ஜமாத் பொறுப்பாளர் பொறியாளர், இசட். உபைதுல்லாஹ், ஓய்வு நிலை அதிபர் எஸ்.ஏ. எஸ். இஸ்மாயில் மௌலானா உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# செந்நெல் கிராம ஆரம்ப சுகாதாரப் பிரிவு பிரதேச ஆஸ்பத்திரியாகத் தரம் உயர்வு

(நூருல் ஹுதா உமர், எம்.ஏ.ஏ.அக்தர் )

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு மக்களின் தேவை கருதியும் சிகிச்சைகளுக்கான ஆளணி மற்றும் முக்கிய வளங்களை பெறும் நோக்குடனும் பிரதேச வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2023.07.28 ஆம் திகதி சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல்.எம். றிபாஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர்எம். சீ.எம். மாஹீர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது இந்த வைத்தியசாலையைப் பிரதேச வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துவதற்கான நியாயம் மற்றும் மக்களின் அபிப்பிராயம் தொடர்பில் விரிவாக விளக்கியிருந்தனர் .

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சின் தரமுயர்த்தல் குழு, செந்நெல் கிராமம் ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப்பிரிவைப் பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தியுள்ளது.

# கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பு

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மற்றும் 42 ஆவது வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்கலைக் கழக வாரம் குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன் கிழமை (27) கிழக்குப் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் கிழக்குப் பல் கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா தலைமையில் நல் லையா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மூன்று அமர்வுகளாக இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் 1649 உள்வாரி மாணவர்களும், 55 பட்டபின்படிப்பு மாணவர்களும், 56 வெளிவாரி மாண வர்களும் அடங்கலாக 1760 மாண வர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட வுள்ளன.

இலங்கை, மாலைதீவு மற்றும் தென் ஆசியாவுக்கு உரித்தான உலக வங் கியின் முன்னனி பொருளியலாளரும், மனித அபிவிருத்திக்கான தலைவரு மான பேராசிரியர் கர்ஷ அத்துருபான, இலங்கைக்கான குவைத் நாட்டின் தூ துவர் கலாப் எம்.எம்.பூ தாய்ர் மற்றும் பொது நலவாய கல்விக்கான பிரதம நிறைவேற்று தலைவர் பேராசிரியர் ஆஸா எஸ்.கன்வார் ஆகியோர் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.



# கைப்பணி கண்காட்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவனெல்ல, அரநாயக வில்பொல பிரகதி மகளிர் சங்கம் ஏற்பாடு செய் திருந்த கைப்பணி பயிற்சி கண்காட் சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வில்பொல அஷ்ரப் ஞாபகார்த்த மண் டபத்தில் அண்மையில் நடைபெற் றன.

மாவனல்லை மேலதிக வலய கல்வி பணிப்பாளர் சாந்தனி ராஜவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில், அரநாயக்க முறைசாரா கல்வி அதிகாரி சம்பா திசாநாயக்க, கிராம சேவை உத்தியோஸ்தர் பி. வி.டி.தனபால, பிரதேச செயலக அபிவிருத்தி உத்தி யோஸ்தர் மிஹிரி ஆரியவன்ஷ, கைப் பணி பயிற்றுவிப்பாளர் நிரோஷி சமன் திகா ஜயவர்தன மற்றும் நலன் விரும் பிகள், பாடசாலை மாண வர்கள் என பலரும் கலந்து கொண்ட னர்.

# வீதியில் பயணித்த கார் மீது பாறி வீழ்ந்தது பாரிய மரம்!

(கே எ ஹமிட் , அஸ்ஹர் இப்றாஹிம், சப்னா றிபாஸ்)

வீதிக்குக் குறுக்காக வீழ்ந்த மரம் வீதியில் பயணித்த கார் மீது விழ்ந்ததில் காரின் முன்பகுதி சேதமடைந்தது.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அண்மித்ததாக இருந்த மரம் அடியோடு சாய்ந்து வீழ்ந் தது.

இதன் போது காரில் பயணித்தவருக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை . சிறிது நேரம் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.



# தமிழருக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் நாம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு

(பழுவூரான்)

தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் தமது ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அதற்காகவே தியாகதீபம் திலீபன் போன்றவர்கள் தியாகங்களை செய்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவுதினம் மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு முன்னாள் எம்.பி. பா.அரியநேத்திரன் மலர்மாலை அணிவித்தார். முன்னாள் எம்.பி. ஞா.சிறிநேசன் ஈகைச்சுடர் ஏற்றினார்.

அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

2010ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக்கட்சி இந்த நிகழ்வைச் செய்துவருகின்றது.

திலீபன் மருத்துவ பீட மாணவனாயிருந்து தமிழர்களின் விடுதலைக்காக



புலிகளுடன் இணைந்து கொண்டார். 21 வயதில் இயக்கத்தில் இணைந்த அவரின் திறமையைக் கண்ட தலைவர் அவரை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமித்தார்.

1987ஆம் ஆண்டு அமைதிப் படையென்ற தோரணையில் இந்திய இராணுவம் கால்பதித்த நிலையில் பல அநியாயங்களை செய்தபோது அது தொடர்பில் பேச்சு நடைபெற்றுத் தோல்வியடைந்த நிலையில் அகிம்சைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தியா அகிம்சையால் விடுதலை பெற்ற நாடு, காந்திய அகிம்சை பேசும் நாடு என்ற அடிப்படையில் அகிம்சை போராட்டம் நடைபெறும்போது அதற்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே திலீபன் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

ஆனால் இந்தியா அந்த அகிம்சை போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் சரியாக 12 ஆவது நாளில் திலீபன் உயிர்நீர்த்தார்.

உலக வரலாற்றில் 23 வயது இளைஞன் ஒருவர் உண்ணா விரதப் போராட்டம் நடத்தி உயிர்நீத்த சம்பவம் ஈழத்திலேயே இடம்பெற்றுள்ளது.

அதேபோன்றுதான் இந்தியப் படைக்கு எதிராக 1989 ஆம் ஆண்டு 54 வயதுடைய தாய் உண்ணாவிரத மிருந்து உயிர் நீர்த்ததும் வரலாறாகும். இந்த இரண்டும் இந்திய இராணுவம் இங்கு கால்பதித்தமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டவை.

13 ஆவது அரசியலமைப்பு தொடர்பாக நாங்கள் இன்று பேசிக் கொண்டிருக்கின்றோம். 36 வருடங்களுக்கு பின்னர் நாங்கள் மீண்டும் அதனை சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் திலீபனின் கோரிக்கைகளுக்கு அப்பால் இந்த 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலான தீர்வை வழங்குவதற்கான அழுத்தங்களை வழங்குவதிலிருந்து இந்திய அரசு தவறிவருகின்றது.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத் தில் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே இலங்கை தமிழரசுக்கட்சி இன்றும் வலியுறுத்திவருகின்றது.- என்றார்.

# விருது வழங்கி கௌரவிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

சிலோன் அமீர்கான் பாடகர், இசையமைப்பாளர் மற்றும் சர்வதேச பாடகி சுல்பித் சுபியின் இசை நிகழ்சி அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

இந் நிகழ்வைக் குளோபல் ஏசியன் சாதனையாளர் கவுன்சில் 2023 மற்றும் ஐக்கிய அமெரிக்கா சொகுசு கப்பல் நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வுக்கு இலங்கையில் இருந்து வர்த்தகரும், மனித உரிமைகள் சங்கத்தின் கலாநிதி எம்.ஏ.சி. மஹ்சூன் சென்றிருந்தார். அவர் அங்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இயக்குநர் கே.பாக்கியராஜ், நகைச்சுவை நடிகர் செந்தில் ஆகியோர்க தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் சர்வதேச நாடுகளில் இருந்து வருகை தந்த சாதானையாளர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# சிறார்களின் வர்த்தகச் சந்தை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு விதுர கல்லூரியில் தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் அளவீட்டு முறைமைகள் வர்த்தக சந்தை பாடசாலை ஆசிரியர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தற்போதய உலக அறிவியலுக்கு சவால் விடும் வகையில் பிஞ்சு மனங்களில் பழைய நிறுவை அளவீட்டில் இருந்து தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச அளவீட்டை அறிமுகம் செய்யும் வகையில் இந்த வர்த்தக முகாம் அமையப்பெற்றிருந்தது.

புத்தக கல்வியிலிருந்து சற்று விலகி செயன்முறை மூலம் கணித அறிவை புகட்டும் போது மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பங்கேற்கின்றனர்.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை


# sky Yoga

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

**செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00**

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்

**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள் (Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
**0779 371 846**
**0777 364 885**
**0774 951 607**






# போதைப்பொருள் பாவனையை இளைஞரிடையே குறைத்தல்!

இன்றைய உலகம் தன்னை வளர்த்து வரும் உலகம் – நவீனயுகம் – புதிய திருப்பம் எனப் பல கோணங்களிலும் அழகுப்படுத்தி மக்களை தன் பக்கம் இருப்பதில் முன்முரமாக ஈடுபடுகிறது.

இந்த வளர்யுகத்தில் பலரும் பல வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அந்தவகையில் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் விடயம் ஓர் சமூகப் பிரச்சினையாக மாறிவருகின்றது.

மனிதனால் உட்கொள்ளப்படும் போது அவனது உடலில், மனதில் அல்லது நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இரசாயனப் பொருள்களை போதைப் பொருள்களாகும். இயற்கை அல்லது செயற்கை முறைகளால் பெறப்படும் நூற்றுக் கணக்கான வகைப் பொருள்களே உலக மக்களால் தற்போது பாவிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் ஆவர். இவர்கள் பாடசாலைக்குச் சென்று பல்கலைக்கழகம் முடித்து சிறந்த பட்டதாரிகளாக வருவதற்கு பதிலாகப் போதைக்கு அடிமையாகி நாளைய நற்சமூகத்தைச் சீரகேட்டின்பால் கொண்டு சென்று விடுவார்கள் போல் தங்கள் செயற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதிலிருந்து எமது இளைஞர்களை விடுவிக்கச் செய்ய பல்வேறு இடையிடுதல் செயற்பாடுகளை மேற்கொள்வது எமது அனைவரதும் கடமையாகும்.

போதையின் விபரீதம் எப்படிப்பட்டது என்பதை அறியாமலே போதைப் பாவனையில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். போதை என்பது தன்னிலை மறக்கச் செய்தல், உடல் உள பாதிப்புகளை ஏற்படுத்தல் ஆகும்.

ஒருவர் போதையைப் பயன்படுத்தியதும் தனது அறிவை இழக்கின்றான், மயங்குகின்றான், உடல் பலவீனம் அடைகிறது, உளம் கெட்டு விடுகின்றது. தன்னால் உறுதியாக நிற்க முடியாமல் ஆடி அசைந்து விழுகின்றாள். அதன்பின் அவனுக்கு ஏற்படும் எந்த ஒரு விடயத்தைப் பற்றியும் அறியாமலே இருக்கின்றான்.

இன்று வளர்ந்துவரும் உலகில் பல்வேறுபட்ட பிரச்சினைகளில், மாணவர்கள் சந்திக்கும் பிரச்சினையும் முக்கிய இடம்பெறுகின்றது. இதில் குறிப்பாக படிக்கும் பருவத்திலுள்ள மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் பிரச்சினை பலராலும் பேசப்படுகின்றது.

பாடசாலைக்குச் சென்று பல்கலைக் கழகம் முடித்து பட்டதாரிகளாக வருவதற்கு பதிலாக போதைக்கு அடிமையாகி பரிதாபகரமாக காட்சி தருகிறார்கள். மாணவர்கள் தங்களது இளமைப் பருவத்தில் நடத்தும் அட்டகாசங்களை பற்றி சிந்திக்கிறார்களே தவிர அதனால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே போதைக்கு ஆளாகின்றார்கள். திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்குப் போதை மற்றும் தீய நடத்தைகள் தடையாக இருக்கின்றன என்பதை உணராமல் இருக்கின்றார்கள்.

எந்தவொன்றையும் அனுபவித்து பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றது.

நண்பர்களுடன் பழகும் போது சிகரெட் புகைத்தல், பியர் குடித்தல் என்ற பழக்கத்துடன் பீடா, பாப்புல், பான்பராக், சாராயம் என்ற பாவனைக்கு ஆளாக, இறுதியில் எல்லா போதைக்கும் அடிமைகளாகி விடுகின்றார்கள்.

தற்போது சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளையும் போதைக்குப் பயன்படுத்துகிறார்கள். அத்துடன் மூக்குத் தூளையும் பயன்படுத்துகிறார்கள். இத்தகைய போதைப் பொருடள்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து அலுவலக வேலை, நட்பு, உறவினர் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டு விடுகின்றது.

போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகிறது.

குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுகின்றது. எல்லோருக்கும் எளிமையாகவும் பரவலாகவும் கிடைத்துவிடும் போதைப் பொருள் தான் சாராயம் மற்றும் அது சார்ந்த மது வகைகள். இந்தப் பழக்கம் தற்போது இளைஞர்கள் பள்ளிப் பருவத்திலேயே பழகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காண முடிகின்றது. இதற்குக் காரணம் ஆங்காங்கே அமைந்திருக்கும் மதுக் கடைகளும் அதற்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமும் தான்.

திரைப்படங்கள் இத்தகைய பழக்கம் இளைஞர்கள் செய்வது தவறில்லை என்று சித்தரிப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். மகிழ்ச்சி மற்றும் துக்க வேலைகளில் மது தேவை என்ற மன நிலைக்கு கொண்டு செல்கிறது.

மது பரிமாறல்கள் மேலைநாட்டுக் கலாச்சாரம் என உயர்வாக கருதுவதும் இப்பழக்கத்துக்கு ஒரு காரணியாகும்.

பிரச்சினைகள் மற்றும் குறைகளைப் போதைப் பழக்கத்தால் மறந்து நிம்மதியாக இருக்கலாம் என்று தவறாக கருதுவதும் இதுபோன்ற தீய பழக்கங்களுக்கு மக்களை ஆட்படுத்தி விடுகின்றது.

தன்னைச் சுற்றியுள்ளவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாக இருந்தால் அவரை திருத்த முயற்சிக்காமல் அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக தாங்களும் அதனை கற்றுக் கொள்ளும் பலரும் இருக்கிறார்கள்.

பாடசாலை மாணவர்கள் தலைநகரில் போதைப் பொருள்கள் பாவிப்பது இன்று வேகமாக பரவி வருகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பற்றி உரிய கவனம் எடுக்காத பட்சத்தில் இனிவரும் காலம் அதாள பாதாளத்துக்குள் சென்று விடும்.

இன்றைய இளம் சமுதாயத்தினர் இணையதளத்தை தங்கள் உலகமாக கருதி வாழ்வதால் அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணைய தளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவற்றைத் தவிர சிறு வயதிலிருந்தே கற்றலில் அதிகம் நாட்டத்தை ஏற்படுத்தல், பத்திரிக்கை வாசித்தல், விளையாடுதல், இறைவழிபாடு, செய்தல் போன்ற பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சிறந்தது. இதன் மூலம் எங்கள் குழந்தைகளை நாமே

(12ஆம் பக்கம் பார்க்க)

# போதைப்பொருள் பாவனையை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாத்துக் கொள்ளலாம்.

மாறாக அவர்கள் யாராயினும் போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்டார்கள் எனில் மருத்துவர்களதும் உளவளத் துணையாளர்களதும் ஆலோசனைப்படி செயலாற்றுவது நல்ல பலனை கொடுக்கும். இது அவர்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி செல்லாமல் இருக்கவும் வழி அமைக்கும்.

உலகளாவிய ரீதியில் பலரும் இப்போதைக்கு அடிமை. இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளனர் என்று தேசிய போதை தடுப்புச் சபை எச்சரித்துள்ளது.

போதை வஸ்துக்கு அடிமையானவர்களில் 50 வீதமானவர்கள் திருமணமாகாத இளைஞர்களாவர். 45 விதமானவர்கள் திருமணமானவர்கள். இதில் 50 வீதத்தில் இருந்து 69 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள். ஆறு மணி நேர அற்ப சந்தோஷத்துக்காகத் தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைக்கும் இளைய சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை மீட்பது நம் அனைவரதும் கடமையாகும்.

இளையோர்கள் மத்தியிலான போதைப் பொருள் பிரயோகத்தைக் குறைக்க எவ்வாறான இடையிடுதல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இன்றைய சமூகத்தில் எல்லாவிதமான குற்றச் செயல்களுக்கும் காரணமாக இருக்கும் விடயம் இந்த போதைப்பொருள் பாவனையாக தான் இருக்கிறது.

இன்று சமூகத்தில் வாழ்வோரில் போதைக்கு அடிமையாகாதவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. 1980களில் மது அருந்துபவர்களின் வயதில்லை 26 ஆக இருந்தது. 2007 இல் மேற்கொண்ட ஆய்வில் 19 -26 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் மத்தியில் போதைப் பழக்கம் 60 வீதத்தால் அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டது. ஆகையால் எமது இளைஞர்களிடம் இப் பாவனையை குறைப்பது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே இளைஞர் மத்திலான இப் போதைப் பொருள் பாவனையை குறைப்பதற்கு, இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனைக்கான முதன்மை காரணிகள் பற்றி ஆராய வேண்டும். கண்டறிந்த காரணியை நிவர்த்தி செய்யவோ அல்லது அதிலிருந்து மீளவோ உதவி மற்றும் ஆலோசனை அளித்தல் வேண்டும். சிகிச்சை மற்றும் உளவளத்துணையாளர்களின் ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். சட்டங்கள்,தண்டனைகள் மூலம் விழிப்புணர்வளித்தல் வேண்டும். வீடுகளில் பெற்றோர்களின் கவனத்துக்கு உட்படுத்துதல் வேண்டும். போதைப் பாவனையால் அவர்கள் எதிர்நோக்க வேண்டிய பிரச்சனைகள் பற்றி தெளிவூட்டல் வேண்டும்.

இளைஞர் சமுதாயத்தினர் வீட்டுச் சூழல், குடும்பப் பிரச்சினை, சமூக சூழல், சமூக வலைத்தளங்களின் தாக்கம், போட்டி சூழலுக்கு முகங்கொடுக்க முடியாமை போன்ற காரணிகளால் போதைக்கு அடிமையாகி தங்களது எதிர்காலத்தையே சீர்குலைத்து விடுகின்றனர்.

இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களை ஒருபோதும் அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. இதனால் தாங்கள் முன்னேறுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் இந்த போதையின் அடிமை காரணமாக அந்த வாழ்க்கையை இழந்து விடுகின்றார்கள். பின்னர் அந்தச் சந்தர்ப்பத்தைத் தேடிச் செல்லும்போது அந்தச் சந்தர்ப்பம் மீண்டும் கிடைக்க முடியாமல் போதலும் இதற்கு காரணமாகின்றது.

இன்றைய இளம் தலைமுறையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக போதைப் பொருள் பாவனை அமைந்துள்ளது. இது இளம் தலைமுறையினரைத் திசைமாற்றி அவர்களைத் தவறான பாதையில் தள்ளிவிடுகிறது.

இந்த நிலையில் போதைப் பொருள்களின் பாவனையைத் தடுத்து நிறுத்துவதும் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவத்தோடு அதற்கான இடையிடுதல் செயற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

அந்த வகையில் போதைப் பொருள் பாவனையை இளைஞர்கள் மத்தியில் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் மேற்கொள்ளக் கூடிய பல இடையிடுதல் செயல்பாடுகளை இவ்வாய்வில் நோக்கலாம்.

போதைப்பொருள் பாவனையால் எமது சமூகம் சீரழிவது மறுக்க முடியாத உண்மையாகும். இதற்கு அடிமையானவர்கள் தமது வாழ்க்கையை இழப்பதுடன் தம்மை சார்ந்து இருப்பவர்களின் வாழ்க்கையையும் படுகுழியில் தள்ளி விடுகிறார்கள்.

ஆகவே எமது உறவினர்களையும், எம்மையும், எமது வருங்கால இளம் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது நமது ஒவ்வொருவரதும் கடமையாகும். நம்மால் இயன்ற இடையிடுதல் செயற்பாடுகளை மேற்கொண்டு போதையற்ற இளம் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

**சொக்கலிங்கம் லோஜினி**
ஊடக கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம் ,
யாழ். பல்கலைக்கழகம்.

# மாணவிக்குக் கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இறக்காமம் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி திணைக்களத்தால் நடத்தப்பட்ட 'கெகுழு' சிறுவர் கழக கலாச்சார போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாண வர்களுக்குச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றம்ஸான் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம். எஸ். சப்ராஸ் கலந்து கொண்டார்.



சிறுவர் கதை (எழுதுதல் ) போட்டி, மொழியுரிமையும் அதன் பயன்களும் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டி ஆகிய இரு போட்டிகளிலும் வெற்றிபெற்ற இறக்காமம் அல் அஸ்றப் தேசிய பாடசாலை தரம் 9 இல் கல்வி பயிலும் ஹுசைன்தீன் ஸைனப் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# நுணுக்குக்காட்டி வழங்கி வைப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வள முகாமைத்துவம் செயற்றிட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலைக்கு நுணுக்கு காட்டி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஐ.எல்.எம்.றிபாஸ், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ஓய்வு நிலையில் பாராட்டு




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள பிராந்திய மருந்து விநியோகப் பிரிவின் பொறுப்பதிகாரியாக சுமார் 17 வருடங்கள் கடமையாற்றிய மருந்தாளர் ஐ.எல்.அப்துல் றகுமான் தனது 36 வருட கால அரச சேவை சுகாதாரப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரைப் பாராட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா திங்கட்கிழமை (25) பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய மருந்தாளர் திருமதி தர்ஷினி இந்திரகுமார் ஆகியோர் மருந்தாளர் றகுமானின் கடந்தகால சேவைகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர்.

தொடர்ந்து அவரது சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## நீர்வெறுப்பு நோய் தினத்தில் நாய்களுக்குத் தடுப்பூசி

(எம்.எம்.றம்ஸீன்)

இன்று 28 ஆம் திகதி உலக நீர் வெறுப்பு நோய் தினமாகும்.

இதனை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தொற்று நோய்ப் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணைந்து விஷர் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் .

இந்த நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.





# கல்முனை மாணவர்களுக்கு போசணை பிஸ்கட்டுகள்

(நூருல் ஹுதா உமர், எம்.எம். றம்ஸீன்)

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் போசணை முகாமைத்துவம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களின் போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையால் போசாக்கு உணவு வழங்கும் விசேட வேலைத் திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் போசாக்கு நிறைந்த பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அக்கரைப்பற்று ஆயுள்வேத மருந்து உற்பத்தி பிரிவால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பிஸ்கட்டுகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (26) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனைப் பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை அல்-முனீரா பெண்கள் உயர் பாடசாலை, நிந்தவூர் ஜேர்மன் நட்புறவு கனிஷ்ட பாடசாலை, அட்டப்பள்ளம் ஸஹிதா வித்தியாலயம் என மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கு போசாக்கு பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டன.



# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு சிறப்பான செயற்றிறன் விருது

(சியாத் .எம்.இஸ்மாயில் )

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு தேசிய ரீதியில், தாய் மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு தர மதிப்பீடுகளில் மிக சிறப்பான செயற்றிறனுக்கான அங்கீகார விருது மற்றும் நோயாளி பாதுகாப்பு கருதி தீவிர சிகிச்சை பிரிவுக்கான சிறப்பு சான்றிதழ் என்பன கிடைத்துள்ளன. சுகாதார அமைச்சால் உலக நோயாளி பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு 'நோயாளிகளின் பாதுகாப்புக்காக நோயாளிகளை ஈடுபடுத்துதல்' எனும் தொனிப் பொருளில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். அசேல குணவர்த் தன தலைமையில் பண்டாரநாயகக்க சர்வதேச மாகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது இவை வழங்கி வைக்கப்பட்டன.



# காணிப் பத்திரம் வழங்கல்

(எம்.எப்.நவாஸ் )

காணி அளிப்புப் பத்திரம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஜனாப். வுஆ. முஹம்மத் அன்ஷார் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ஜனாப்.லு. றாஷித், நிர்வாக கிராம உத்தியோகத்தர், காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 13 பயனாளிகளுக்கான புதிய காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டன.



# வட்டமடு விவசாயக் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

## அதா உல்லா நம்பிக்கை தெரிவிப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக விடுவிக் கப்படாமல் இருக்கும் வட்டமடு உள்ளிட்ட விவசாயக் காணிகள் மிக விரைவில் விடுவிக்கப்படும் என்று தேசிய காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்–

வட்டமடு, பொத்துவில் மற்றும் சம்மாந்துறை போன்ற இடங்களில் உள்ள பல விவசாயக் காணிகள் நீண்ட காலமாக விடுவிக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வந்துள்ளன.

இக்காணிகளை விடுவிப்பதற்காக கடந்த பல மாதங்களாக பல தரப்பு மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

விவசாயிகளுக்கு நிரந்தரத் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க எடுக்கப்பட்ட பல கட்ட முயற்சிகளில் அதற்கு சாதகமாக செயற்பட்ட அரசுக்கும் அதிகாரிகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.





# மாற்றுத் திறனாளிகளின் பாடசாலை புனரமைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

றிஸ்லி முஸ்தபா கல்வி நிதியத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் மர்ஹூம் அல் ஹாஜ் மயோன் முஸ்தபா, மர்ஹூம் ஹாஜியானி சப்ரியா அஹமட் முஸ்தபா ஆகியோரின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பு ஏறாவூரில் உள்ள மாற்றுத் திறனாளி சிறுவர்களுக்கான பாடசாலை புனரமைக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட கட்டடங்களை மாணவர்களின் பாவனைக்காக றிஸ்லி முஸ்தபா உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் சர்வமத பெரியார்கள் மற்றும் பிரதேசவா சிகள் கலந்து கொண்டனர்.



# மாணவருக்கு சைக்கிள்கள்

(அஸ்ஹர் ஆதம் )

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப் பட்டுள்ளன.

இதற்கான நிகழ்வு கல்லூரியின் அதிபர் திருமதி நஜீபா ஏ றஹீம் தலைமையில் இடம்பெற்றது.

இஸ்லாமிக் றிலீப் அமைப்பின் அனுசரணையில் 8 மாணவர்களுக்கு இவை அண்மையில் வழங்கப்பட்டன.



# பூநகரிப் பகுதி விவசாயிகளுக்கு எலிக் காய்ச்சல் விழிப்புணர்வு

(த.சுபேசன்)

பூநகரிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் சுகாதாரவைத்திய அதிகாரி மருத்துவர் துஷ்யந்தன் மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றெனால்ட் ஆகியோர் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுகளை வழங்கினர்.

இது தொடர்பாக சுகாதார அதிகாரிகள் விவசாயிகளுக்கு கருத்துத் தெரிவிக்கையில் –

தற்போது பருவகாலப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கவுள்ளதால் தொற்றுடைய எலிகளின் சிறுநீர் நீருடன் கலந்து வயல் வேலையில் வெற்றுகால்களுடன் ஈடுபடும்போது எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இந்த நோய்க்கு உரிய சிகிச்சை உரிய நேரத்தில் பெறாதுவிடின் அங்க செயலிழப்புகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழலாம்.

எனவே வயலில் எலிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை முன்னெடுத்து நோயில் இருந்து தப்பிக்க வேண்டும்.

எலிகளை வேட்டையாடும் பறவைகள், ஊர்வனவற்றின் வரவை அதிகரிக்கும் வழிகளைக் கையாளுதல், வரம்பை அண்டிய புற்றுக்களை அகற்றுதல், முழங்கால்வரை மூடிய நீர்கசியாத காலணிகள் மற்றும் கையுறைகளை அணிதல் மற்றும் நோய் பரவுகின்ற பகுதியிலுள்ளோர் முற்பாதுகாப்புக்கான மருந்துகளை உரிய வைத்திய ஆலோசனையுடன் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களில் முக்கியத்துவம் காட்ட வேண்டும்.

எனவே விவசாயிகள் இந்த நோய் பற்றி விழிப்பாக இருக்கவேண்டியது மிக அவசியமாகும் என்று தெரிவித்திருந்தனர்.

பெயாமெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு தங்கள் சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவுபெற்றனர்.

# ஆரம்பப் பிரிவு மாணவர் கண்காட்சி



(ஹஸ்பர்)

ஊற்றெடுக்கும் அருவிகள் கண்காட்சி திஹாறிய தாறுஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலையில் நடை பெற்றது.

இந்த கண்காட்சியில் திஹாறிய தாறுஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலை, கஹடோவிட அல் பத்ரிய மஹா வித்தியாலயம், கஹடோவிட முஸ்லிம் பாலிகா மஹா வித்தியாலயம், ஹொரகொல்ல ஒச்சட்வத்த மஹா வித்தியாலயம், உடுகொட அறபா மஹா வித்தியாலயம், திஹாறிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம், பூகொட குமாரிமுல்லை மஹா வித்தியாலம் போன்றவற்றின் மாணவர்கள் அவர்களது திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய ரீதியில் ஆக்கங்ளை மேற்கொண்டிருந்தனர்.

# Allrounder விடுதலை



அவுஸ்திரேலிய யுவதியொருவருடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த வழக்கிலிருந்து, இலங்கைக் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் தனுஷ்க குணதிலக இன்று (28) அவுஸ்திரேலிய நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு அவுதிரேலியாவில் நடைபெற்ற இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி பங்கேற்றிருந்த நிலையில், தனுஷ்க அங்குள்ள யுவதியொருவருடன் பாலியலில் ஈடுபட்டிருந்தமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரை முடித்துக்கொண்டு, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் திகதி இலங்கை அணி நாடு திரும்ப ஆயத்தமாகவிருந்த நிலையில் தனுஷ்க கைது செய்யப்பட்டார்.

தனுஷ்க, யுவதியொருவருடன் ஒபெரே ஹவுஸ் பகுதிக்கு அருகில் உள்ள இடமொன்றில் மதுபானம் அருந்திவிட்டு அந்த யுவதியின் வீட்டுக்குச் சென்றுள்ளார் எனவும், அதன்போதே அந்த யுவதியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

அந்த யுவதி பாதுகாப்பான உடலுறவுக்கு விருப்பம் தெரிவித்தபோதிலும், தனுஷ்க குணதிலக ஆணுறை இல்லாமல் உடலுறவில் ஈடுபட்டார் என அந்த யுவதி குற்றஞ்சுமத்தியிருந்தார்.







தனுஷ்க குணதிலக ஆணுறை இல்லாமலே உடலுறவில் ஈடுபட்டதை தாம் அவதானிக்கவில்லை எனவும், உடலுறவின் பின்னர் ஆணுறை கீழே வீசப்பட்டிருந்ததை தாம் அவதானித்தார் எனவும் முறைப்பாட்டாளரான யுவதி, நியூ சவுத் வெல்ஸ் நீதிமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த யுவதியால் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டு முற்றிலும் போலியானது என தனுஷ்க குணதிலக சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் தெரிவித்திருந்தார்.

இதன்படி, தனுஷ்க குணதிலக குற்றமற்றவர் எனத் தீர்ப்பளித்த நீதிபதி, அவர் உண்மையானவர் எனவும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

தனுஷ்கவுக்கு எதிராக முன்னர் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தபோதும், மூன்று குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டிருந்தன. எனினும், பாலியல் குற்றச்சாட்டு மாத்திரமே நீடித்து வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான தனுஷ்க, 2017ஆம் ஆண்டு சர்வதேசக் கிரிக்கெட்டுள் நுழைந்தார்.

இவர் 8 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 299 ஓட்டங்களையும் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளார்.

அதேவேளை, 47 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி ஆயிரத்து 601 ஓட்டங்களையும் 8 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

அதேபோல, 46 இருபது-20 போட்டிகளில் பங்கேற்று 741 ஓட்டங்களையும் 6 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

# இலங்கைக்கு செல்லவேண்டும்: சாந்தன் எழுத்தாணை மனு தாக்கல்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து விடுதலையான சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நேற்றைய தினம் சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த பத்து மாதங்களாக நான் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளேன்.

இலங்கையில் உள்ள எனது வயதான தாயை பார்க்க போக முடியவில்லை என்றும் மனுவில் சாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மனுவில், தன்னை இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசு எந்த ஒரு நடவடிக்கை யும் எடுக்கவில்லை என்றும் எனவே என்னை விரைவாக இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் உத்தரவிட்டு விரைவாக தண்னை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதற்கமைய சாந்தன் தாக்கல் செய்த மனு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது என கூறப்படுகிறது.

## காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை: இந்தியாவுக்கு எதிராக கிடைத்த ஆதாரம்!



கனடாவில் காலிஸ்தான் பிரிவினை வாதி நிஜ்ஜார் கொலை செய்யப்பட்டதில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதற்கு வலுவான ஆதாரம் உள்ளது என புதிய ஜனநாயகக் கட்சித் தலைவரும், கனடா சீக்கிய எம்.பி.யுமான ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்தியா மீது கனடா ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியதால் இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசுக்கு ஆதரவு அளித்து வரும் ஜக்மீத் சிங் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா மீது கனடா பிரதமர் கூறியுள்ள குற்றச்சாட்டு மிகவும் தீவிரமானது.

கனடா அரசுக்கு கிடைத்த உளவுத் தகவல்கள் அடிப்படையில்தான் இந்த குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன.

எனவேதான் கனடா அரசும் இது தொடர்பாக முழு விசாரணை நடத்தி உண்மையை வெளிக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

இந்த விடயத்தில் அமெரிக்காவும் கனடாவுக்கு ஆதரவாக உள்ளது. எனவே, நாங்கள் கனடா அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். கனடாவில் நீண்ட காலமாகவே இந்திய அரசால் சீக்கிய மக்கள் குறிவைக் கப்படுகிறார்கள்.

கனடாவில் உள்ள சீக்கியர்கள் மட்டுமல்லாது இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்ட ஏனைய மக்களும் இந்த விடயத்தில் இந்தியா மீது அதிருப்தியாகவே உள்ளனர் என தெரிவித்துள்ளார்.

## நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தால் வலிமைதான்!

நடிகர் விஜய் அரசியலுக்கு வருவது நாம் தமிழர் கட்சிக்கு வலிமைதான் என்று சீமான் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய 2 கட்சிகளுக்கும் பெயர்தான் மாறுகிறதே தவிர, பொருளாதாரம், வெளியுறவு, மருத்துவம் என கொள்கைகள் அனைத்தும் ஒன்று தான். இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் நடத்திய இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குளறுபடிகளை சுட்டிக்காட்டி, நடிகர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள லியோ திரைப்பட பாடல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு அரசு அனுமதி மறுத்தது வேடிக்கையானது.

இதை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. பொலிஸால் உரிய பாதுகாப்பு வழங்க முடியவில்லை என்றால், பாதுகாப்பு வழங்க முடியவில்லை எனக் கூறி மன்னிப்பு கேட்க வேண்டும்.

நடிகர் விஜய் அரசியலுக்கு வரப் போகிறார் என தெரிவதால், அரசு நெருக்கடி கொடுக்கிறது. அவர் அரசியலுக்கு வருவதால் நாம் தமிழர் கட்சிக்கு வலிமைதான் என்று தெரிவித்துள்ளார்.

# கனடாவின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல்: இந்தியாவை சாடுகிறார் கனடா தூதுவர்!



வெளிநாட்டு தலையீடுகளால் கனடாவின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத் தல் நிலவி வருகிறது என ஐ.நா பொதுச் சபையில் கனடா தூதுவர் ராபர்ட் ரே தெரிவித்துள்ளார்.

கனடாவில் சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய அரசாங்கத்திற்கு தொடர்பு இருக்கிறது என கனடா அரசு சமீபத்தில் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கு இந்தியாவில் கடுமையான எதிர்ப்பு உருவானதுடன், இருநாடுகளும் அவர்களது தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது மற்றும் விசா கட்டுப் பாடுகளை விதித்துள்ளது.

இதற்கிடையில் ஐ.நா. பொது கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், வெளியுறவு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போது, கனடாவில் நடந்த படுகொலை திட்டமிட்டு நடத்தப்பட்ட குற்றம், இது தொடர்பான விவரங்களை கனடா அரசுக்கு இந்தியாவின் மத்திய அரசு பகிர்ந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று ஐ.நாவின் பொது சபையில் பேசிய கனடா தூதுவர் ராபர்ட் ரே, வெளிநாடுகளின் தலையீடுகளால் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போது சுதந்திரம் மற்றும் ஜனநாயக சமூகம் குறித்து பேச வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

மேலும் இரு நாடுகளுடனான உறவை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விதிமுறைகளை வகுக்க முடியாது, பொதுவான விதிகளை பின்பற்றாவிட்டால் திறந்த மற்றும் சுதந்திரமான சமூகங்களை இவை பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# மாணவி மீது கத்தி குத்து: லண்டன் பரபரப்பு!




லண்டன் குறைடன் பகுதியில் 15 வயதான பாடசாலை மாணவி ஒருவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சிறுமி கத்தியால் குத்தப்பட்ட ஒரு மணி நேரத்தின் பின்னர் இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லண்டன் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று பரபரப்பான காலை வேளையில் இடம்பெற்ற இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் லண்டன் வாசிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

வெல்லஸ்லி சாலையில் நடைபெற்ற இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்த பகுதிக்கு விரைந்து சென்ற பொலிஸார் மற்றும் அவசர குழுவினர் மாணவியின் உயிரை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், மாணவியின் உயிரை காப்பாற்ற முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

காலை 8.30 மணியளவில் இந்த கத்திக்குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. காலை 9.20 மணி அளவில் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட சிறுவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு மாத்திரம் லண்டனில் கொலை செய்யப்பட்ட பதினாறாவது நபராக இந்த மாணவி பதிவாகியுள்ளார். இந்த 16 பேரில் 13 பேர் கத்தியால் குத்தப்பட்டு பலியாகியுள்ளனர்.

# தாய்வானின் நீர்மூழ்கிக்கப்பல் அறிமுகம்!

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் நீர்மூழ்கிக் கப்பலை தாய்வான் இன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

சீனாவின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பை பெறும் வகையில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் அறிமுகப்படுத்தப்பட்டது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த நீர்மூழ்கிக் கப்பல் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வருட இறுதியில் கடற்படைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

